பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோர்ப்பத்தி ஞூ சித்திரை மீ 05 உ வியாழக்கிழமை [18-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 135

# கோதீவில் ஹெலி நேற்றிரவு தாக்கு!

## பயணிகள் அல்லோலகல்லோலம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

கேரதிவு மற்றும் சங்குப்பிட்டி இறங்குதுறைகளில் நேற்றிரவு ஹெலிக்கொப்டர் ஒன்று கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியது. இதனால் துறைகளில் காத்து நின்ற பயணிகள் பெரும் அல்லோல கல்லோலப்பட்டனர்.

நேற்றிரவு 8 மணியளவில் நூற்றுக்கணக்கான பயணிகள் துறைகளில் படகுகளுக்காகக் காத்திருக்கையில் திடீரென வந்த ஹெலி ஒன்று கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியது.

இதனால் துறைகளில் நின்ற பயணிகள் தத்தமது பொருள்களைப் போட்டுவிட்டு கடலுக்குள் பாய்ந்தும் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடி ஒளிந்தும் அல்லோல கல்லோலப்பட்டனர் இதனால் பலர் சிறு காயங்களுக்கு இலக்கானார்கள்.

ஹெலித் தாக்குதலுக்கு [4 ஆம் பக்கம் பார்க்க]

## தனங்கிளப்பில் ஹெலி சூடு! பயணி உயிரிழப்பு!!

தனங்கிளப்பு சந்திக்குச் சமீபமாக, சாவகச்சேரி — தனங்கிளப்பு வீதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் ஓட்டோ ஒன்றின் மீது ஹெலி தாக்குதல் நடத்தியது.

ஓட்டோ ஓரளவு சேதமடைந்தது. சன்னங்கள் துளைத்து வீதியில் குழிகள் ஏற்பட்டுள்ளன.

ஓட்டோவில் இருந்து இறங்கி ஓடியதாகக் கூறப்படும் பூநகரி பல்லவராயன் கட்டைச் சேர்ந்த செல்லத்துரை தவநேசன் [19 வயது] என்றவரை ஹெலி கலைத்து கலைத்து வேட்டுக்களை தீர்த்தது.

தவநேசன் உடல் எங்கும் கடுமையான காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு நேற்றிரவு மரணமானார்.

இச்சம்பவத்தில் மேலும் சிலர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது. [ஜ-15-3]

## ஒன்றரை மாதமாக படகில் மிதந்த உணவு பொருள்கள்!

### மீட்டு எடுப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 18

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியான் இறங்குதுறைக்குச் சமீபமாக நடுக்கடலில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக இழுவைப் படகில் [பாஜ்] மிதந்து கொண்டிருந்த உணவுப் பொருள்களைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்க நேற்று முயற்சி எடுக்கப்பட்டது.

சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து கப்பலுடன் இந்த இழுவைப் படகும் கொண்டு வரப்பட்டு, அதன் மூலம் முல்லைத்தீவுக்கான உணவுப் பொருள்களை இறக்குவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

அந்தச் சமயத்தில் திடீரென முல்லைத்தீவுப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாலும், அப்பகுதியில் இராணுவ நடவடிக்கை இடம்பெற்று வந்ததாலும் பொருள்களை இறக்கும் [4 ஆம் பக்கம் பார்க்க]

## நாளை கூட்டத் தொடர் ஆரம்பம்:

## நாடாளுமன்றில் பிரேமா முக்கிய முடிவு அறிவிப்பார்?

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஜனாதிபதி பிரேமதாஸா நாளை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

அங்கு அங்குரார்ப்பண உரை நிகழ்த்தும்போது ஜனாதிபதி பிரேமதாஸா முக்கிய அறிவிப்பு எதனையும் வெளியிடக்கூடும் என்று ஊகிக்கப்படுகிறது;

இதற்கிடையில்—

அங்குரார்ப்பண நிகழ்ச்சியைப் பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளது.

ஏனைய எதிர்க்கட்சிகள் இந்தப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமா என்பது இன்று நடைபெறும் எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவிருக்கிறது. [உ-எ]

## வீடு புனரமைப்புக் கடன்; வங்கிகள் இனி வழங்காது?

யாழ்ப்பாணம், ஏப். 18

இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க வங்கிகள் மூலம் கடன் உதவி வழங்கும் திட்டம் முற்றாக நிறுத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்-மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டில் இருந்து கடந்த ஜூன் மாதம் வரை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்குத் தேவையான கடனை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வழங்கியிருந்தது.

இந்த நிதி மூலம் இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் மக்களுக்கு கடன் வழங்கி வந்தன.

மேற்படி நிதி உதவி வழங்கும் திட்டம் மூன்று ஆண்டுகளுக்குள் பூர்த்தியாக்கப [4 ஆம் பக்கம் பார்க்க]

## சிவப்பு நிறத்தில் சாணம்; ஓமந்தை பசுக்கள் அதிசயம்!

வவுனியா இறம்பைக்குளம், ஓமந்தைப் பகுதிகளைச் சேர்ந்த மாடுகள் இப்போது சிவப்பு நிறத்தில் சாணம் போடுகின்றன. அங்குள்ள பட்டி மாடுகள் கறக்கும் பாலிலும் ஒருவித மணம் வீசுகின்றதாம்!

வடக்கிலிருந்து லொறிகளில் ஏற்றிச் செல்லப்படும் வெண்காயமும், பீற்றூட்டும் லொறிகள் வவுனியாவுக்கு அப்பால் செல்லமுடியாத நிலை ஏற்படும்போது லொறிகளுக்குள்ளேயே பழுதடைந்து விடுகின்றன. இவ்வாறு அழுகிய நிலையில் கொட்டப்படும் வெங்காயம், பீற்றூட் ஆகிய வற்றை அப்பகுதி பட்டிமாடுகள் சாப்பிடுகின்றனவாம். அதனால் அவை கறக்கும் பாலில் வெங்காய வாசம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-125]

## ருக்மனின் கட்சிக்கு அமைச்சரவையில் இடம்?

கொழும்பு, ஏப். 18

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவை அளிக்க முன்வந்துள்ள ஐக்கிய இலங்கை மக்கள் கட்சிக்கு அமைச்சரவையில் இடமளிக்கப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது:

தமது கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இம்மாதம் 29 ஆம் திகதி முதல் படிப்படியாக இணையும் என்று ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி அமைப்பாளர் ருக்மன் சேனநாயக்கா தெரிவித்தார்.

## தமிழக தேர்தல் மே 26 இல்

சென்னை, ஏப். 18

எதிர்வரும் மே மாதம் 26 ஆம் திகதி - ஒரே நாளில் தமிழகத்தின் சட்டசபைத் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்று பிரதம தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் அறிவித்தார்.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும் சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தலும் அதே திகதியில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தாண்டிக்குளத்தில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப் 18

தாண்டிக்குளம் புதுவீதிப் பகுதியில் நேற்று நண்பகல் 12 15 மணியளவில் திடீரென மோதல் மூண்டது.

புதுவீதியில் அமைந்துள்ள காவல் அரணில் இருந்து சுமார் 15 யார் முன்பாக 15 இராணுவத்தினர் வந்தனர்.

அப்போதே விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. [ஒ]

## முச்சந்தி முரளி



ஓ! மந்தை!! நல்ல காலம் பால் மாத்திரம் வெள்ளையாத்தான் கறக்குது......!

## இந்தியா ராணுவ ரீதியில் தலையிடக் கூடாது!

### கிட்டு கூறியதாக பி. பி. ஸி. தகவல்

லண்டன், ஏப். 18

"ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிடுவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை."

—இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] கூறியதாக பி பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இப்பொழுது இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியா என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்று எமக்குத் தெரியாது:

தேவையானால் இந்தியப் பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் புதிய அரசு அரசியல் அடிப்படையில் தலையிடலாம்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி அமைதியைப்பற்றிப் பேசுகிறார். ஆனால் அதேசமயம் ஸ்ரீலங்கா இராணுவம் வடக்கில் மூர்க்கத்தனமான தாக்குதல்களை நடத்தி பாரிய உயிர்ச் சேதங்களை ஏற்படுத்திவருகிறது. —இவ்வாறு அவர் மேலும் கூறினார். [உ-5]

## அன்னை பூபதி நினைவாக நாளை அஞ்சலிக் கூட்டங்கள்

உண்ணா நோன்பிருந்து தியாக மரணமடைந்த அன்னை பூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவு தினமான நாளை வெள்ளிக்கிழமை நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம், [illegible] பிரிவுகளிலும் இரவு 7 மணிக்கு நினைவுக் கூட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன.

வலிகாமத்தில், நீர்வேலி அத்தியார் கல்லூரியிலும்—

தீவகத்தில் துறையூர் ஐயனார் சனசமூக நிலைய மைதானத்திலும்—

வடமராட்சியில், பருத்தித்துறை ஐக்கிய தேசிய கழக மைதானத்திலும்—

தென்மராட்சியில், கொடிகாமம் மாவீரர் மண்டபத்திலும் கூட்டங்கள் நடைபெறும்.

இந்தக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்கள் பலர் உரையாற்றவுள்ளனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் அணி கவனித்து வருகிறது. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Yamaha - 80 விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க; திரு. மனோகரன், பழைய இல. 3, அம்மன் றோட்; சந்நிதிமடம், யாழ்ப்பாணம். [4019]

அழகிய கலப்பற்ற 5 வயது உடைய அல்சேஷன் நாய் குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க; 58, சமிலியன் வீதி, நல்லூர், [16452]

ஆரம்ப சுகாதாரவழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P., D. C. H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவபீடம்] எழுதியது கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவிபோன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கு ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம், விற்பனை: பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ-4822]

### தேவை

சமூக சேவை நிறுவனத்தில் தங்கி, பணியாற்ற சேவை மனப்பான்மையுள்ளவர் தேவை. ஒய்வுபெற்ற ஆசிரியர் விரும்பத்தக்கது. உணவு, இருப்பிட வசதியும், ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படும். முடிவுத் திகதி 20-4-91 C/o 801, உதயன். [4016]

கொம்போஸிங்கும், பிளேற்றின் மெஷினில் வேலையும் செய்யத் தெரிந்த ஒருவரும், வைண்டிங் வேலைக்கு ஓர் பையனும் தேவை. காலை 9 தொடக்கம் 1 மணி வரை தொடர்பு கொள்ளவும். நியூ எஸ். கே. பிரிண்டிங் வேர்க்ஸ் இல. 7, மின்சார நிலைய வீதி, 2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [16446]

ஆங்கில மருந்துவகை விற்கும் மருந்துக்கடைக்கு பார்மசி அனுபவம் மிக்க ஒரு பெண் விற்பனையாளர் உடன் தேவை. நேரில் வரவும் திருமகள் மருந்தகம், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக] கல்வியங்காடு சந்தை, கல்வியங்காடு. [16443]

### ரைப்ரைட்டர்கள்

தட்டச்சு இயந்திரங்களை சிறந்த முறையில் திருத்தவும், புதிய, பழைய ரைப்ரைட்டர்கள் வாங்கவும், விற்கவும் தமிழ், ஆங்கிலம் [Stencils] வேலைகள் செய்யவும் பியூடோ 39/17, மின்சார நிலைய வீதி, 8ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [இ-4827]

### வாசகர் கருத்தரங்கு

மீரா வெளியீடுகளாக வெளிவந்துள்ள நாவல்களில் நீங்கள் ரசித்துப் படித்த நாவல்களின் விமர்சனங்களை, கருத்துக்களை எழுதுங்கள்: புதியதாக வெளியிடப்படும் மீரா வெளியீடுகளில் பிரசுரிக்கப்படும். விரைவில் சிதம்பர திருச்செந்திநாதனின் ''முள் முடி மன்னர்கள்'' [16450]

### தவறிவிட்டது

கடந்த மூன்று வாரங்களுக்குள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில், ஆவரங்கால் பகுதியில் 71 ஸ்ரீ5234 இலக்க இரண்டு சக்கர உழவு இயந்திர புத்தகம் தவறிவிட்டது. தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: வ. செல்வரத்தினம் (அண்ணா) காட்டுமலை கந்தசுவாமி கோவிலடி, நாவற்காடு, அச்சுவேலி. [4015]

### மணமகள் தேவை

இந்து 36வயதுடைய அனுச நட்சத்திரச் செவ்வாய்க் குற்ற மற்ற பிரான்சில் வேலை செய்யும் அழகிய மணமகனுக்கு, அழகுள்ள, படித்த மணமகள் தேவை. பெண் 31 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். சீதனம் எதிர்பார்க்கப்படும்: மணமகன் விரைவில் வர இருக்கிறார். திருமதி த. சுந்தரம்பிள்ளை, சேச் றோட், சங்கானை. [16451]

### தவறிவிட்டது

சேரதீவு துறைமுகத்தில் முக்கியமான மருத்துவ நூல்களும், உபகரணங்களும் உள்ளடக்கிய சிறிய சறுப்பு நிற தோல் பை [Bag] தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் அல்லது உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். [16454]

### வணிக சிறுகுறிப்பு

வெளிவந்து விட்டது G. C. E. [A/L] வணிக சிறுகுறிப்பு [நடைமுறை விடயம்] எழுதியவர் தே. ஜெயராமன் விலை 15/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, C. C. A. யாழ்ப்பாணம். [சி-4831]


## கம்பியூட்டர் கல்வி

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

★ Diploma in Data Processing and Computer Programming in Basic Language

Weekday 19 - 04 - 1991 [திங்கள், புதன், வெள்ளி]

Weekend 20 - 04 - 1991 [சனி, ஞாயிறு]

★ dBase III + ★ Lotus 1-2-3 ★ Word Star

வகுப்புகளும் நடைபெறுகின்றன.

★ G. C. E. (O/L) படித்த இருபாலாரும் சேரலாம்.

★ Computer Programming in Mathematics.

★ கணிதத்துறையில் A/Lஇல் சித்தியடைந்த இருபாலாரும் சேரலாம்.

**ஆரம்பம்: 20-04-1991**

பிற்பகல் 3-00 மணி




மேலதிக விவரங்களுக்கு:

**UNIKCO COMPUTER CENTRE**

37, Clock Tower Road, JAFFNA.

[வெலிங்டன் சந்திக்கு வடக்குப் புறமாகவுள்ள மேல்மாடியில்]

[சி-4832]

## இலங்கை அதிபர்கள் சேவை

(Sri Lanka Principals' Service)

தரம் I, II, III க்கான

வரையறுத்த போட்டிப் பரீட்சை

1991 ஜூன் 1இல், 8இல்

நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 20 — 04 — 1991 (9 a.m.)

பாடநெறி: திரகித்தல், பொது அறிவு, கல்விக்கொள்கையும் நிருவாகமும்:

தகைமைகள்:

தரம் I: பட்டதாரி 7 வருட சேவை/பயிற்றப்பட்ட ஆசிரியர் 12 வருட சேவை.

தரம் II: பட்டதாரி 5 வருடசேவை / பயிற்றப்பட்ட ஆசிரியர் 10 வருட சேவை;

தரம் III: பயிற்றப்பட்ட ஆசிரியர் 5 வருடசேவை;

★ விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெறலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 19 — 04 — 1991 ★

1. விரிவுரைகள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில்
2. இலவச பாடக்குறிப்புகள் - வினா - விடைப் பயிற்சிகள்
3. கட்டணம் ரூபா 800/- (முழுப் பயிற்சிகளும்)

விவரங்களுக்கு நேரில்:

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD, JAFFNA.

[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]


## 41ஆம் நாள் நினைவஞ்சலி





**மோகன் வேதையன்**

தோற்றம்: 20 — 02 — 1970

கொடியவரின் சீற்றம்: 09 - 03 - 1991

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
நீ சென்ற நாட்கள் நாற்பதொன்றாகின்றன
ஆழிக்கடல் அன்னை உன்னை
அரவணைத்துக் கொள்ள மீளாத்துயில் கொண்டாய்
மாறாத நினைவுடனே வாழ்கின்றோம் நாம்-என்றும்
எம்நாவில் உன்நாமம் தித்திக்கும் தேனடா-என்றும்
எம் உள்ளங்களில் நிறைந்து வாழும்
உத்தமனடா நீ எம் செல்வமே!
களம் கண்டிருந்தால் கவலையை ஒழித்திருப்போம்,
எம் நெஞ்சு நிமிர்ந்திருக்கும் இம் மண்ணில்
கொடியவரின் துப்பாக்கிகள்
குறிபார்த்ததோ உன் உடலை;

அன்பாலும், பண்பாலும் எல்லோர் மனத்திலும் இடம் பிடித்து விட்ட நீங்கள் இருவரும் வாழ்விலும், சாவிலும் இணைந்து கொண்டீர்கள். உங்கள் ஆத்மா இறைவனின் திருவடியில் சங்கமித்து சாந்தியடைய கண்களில் நீர் மல்க பிரார்த்திக்கின்றோம்;

உங்கள் பிரிவால் துயருறும்:

தந்தை, தாய், குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்;

ஏழாலை மேற்கு, ஏழாலை. [16457]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**பொன்னம்பலம் விஜயரெட்ணம்**

[ஓய்வு பெற்ற விவசாய இணைக்கள களஞ்சியப் பொறுப்பாளர்]

தோற்றம்: 28 - 06 - 1920 மறைவு: 29 - 04 - 1990

திதி: 18 - 04 - 1991

எங்கள் காவல் தெய்வத்தை நினைவு கூரும்:

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள்.

1/1. ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். [16422]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஜனாதிபதியின் கருத்து

வடக்கு - கிழக்குப் பகுதியில் இடம்பெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தற்போது முயற்சி எடுத்து வருவதாகவும், தமக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ யுத்தத்தில் நம்பிக்கை இல்லை என்றும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் முயற்சியை அரசு கைவிடவில்லை என்றும், ஸ்ரீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தெற்கில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் ஒருபடி மேலே சென்று உலகில் யுத்தத்தின் மூலம் எவரும் வெற்றி பெற்றது இடையாது. யுத்தம் எந்த வகையிலும் சமாதானத்தை ஏற்படுத்த உதவ மாட்டாது என்றும் அவர் கூறி உள்ளார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் மூண்டு தற்போது பத்து மாதங்கள் கழிந்து விட்டன.

விடுதலைப் புலிகளின் பலத்தை நசுக்கும் ஒரே நோக்கத்துடனேயே ஸ்ரீலங்கா அரசு இந்த யுத்தத்தை ஆரம்பித்திருந்தது. அதாவது இந்தியாவினால் சாதிக்க முடியாது போனதை ஸ்ரீலங்கா அரசு சாதிக்க முயன்றது.

ஆனால் இந்த யுத்தத்தில் இதுவரை அப்பாவி மக்களின் உயிரையும், உடைமைகளையும் அழிக்க முடிந்ததே தவிர அவர்களின் உறுதியை அரசாங்கத்தினால் குலைக்க முடியவில்லை. அதே போன்று விடுதலைப் புலிகளின் பலத்தையும் ஒடுக்கி விட முடியவில்லை.

பதிலுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட தனது படையினரை, அரசாங்கம் இந்த யுத்தத்தில் இழந்துள்ளது. பல முகாம்களையும் பறி கொடுத்த நிலையில் படையினர் இருந்து வருகின்றனர்.

குண்டுவீச்சு விமானங்களையும், ஹெலிக்கொப்டர்களையும், பீரங்கிப் படகுகளையும் தாராளமாகப் பயன்படுத்தியும் அரசாங்கத்தினால் எதிர்பார்த்ததைச் சாதிக்க முடியவில்லை.

நாடு பொருளாதாரத் துறையில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. உலக வங்கியினதும், உதவி வழங்கும் நாடுகளினதும் தயவிலேயே உயிர்வாழ வேண்டிய நிலைமை உருவாகிவருகிறது.

இந்த நிலையிலேயே தற்போது இராணுவத் தீர்வுக்குப் பதிலாக அரசியல் தீர்வு காணும் கருத்துக்கள் தெற்கில் இருந்து வந்து கொண்டிருக்கின்றன. ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் கருத்தும் இத்தகையதொன்றே.

ஆகவே அரசியல் தீர்வு குறித்து தற்போது தெற்கில் இருந்து தெரிவிக்கப்படும் கருத்துக்கள் முன் எச்சரிக்கையுடன் அணுகப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தை என்று அழைத்து மீண்டும் தமிழ் மக்களை அரசு ஏமாற்ற முயலுகிறதா அல்லது உண்மையிலேயே தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க அரசு இதய சுத்தியுடன் விரும்புகிறதா என்பதைக் கண்டறிய வேண்டும்.

அரசாங்கம் உண்மையிலேயே பேச்சுவார்த்தைக்கு விரும்பினால் பேச்சுவார்த்தைஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை அதுவே முதலில் தோற்றுவிக்க வேண்டும். வெறுமனே பேச்சுவார்த்தை பற்றி கதட்டளவில் கூறிக் கொண்டிருப்பதில் எதுவித பலனும் ஏற்படப்போவதில்லை.

## இந்துவில் மூத்தோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா நிறைவாக முன்னோர், மூத்தோரை கௌரவிக்கும் நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் வெள்ளி விழா சேவை புரிந்தவர்களைப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தலும், நூற்றாண்டு காலத்துக்குள் சேவையிலிருந்த அதிபர்களின் உருவ ஓவியங்களைத் திரை நீக்கம் செய்தலும் அன்றைய தினம் இடம்பெறும். [உ]

## தமிழ்த்துறை பேராசிரியர்

கொழும்பு, ஏப்ரல் 18

பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த்துறை பேராசிரியராக, பேராசிரியர் எஸ். தில்லைநாதன் நியமிக்கப்பட்டார். [இ-எ]

# உணவு முத்திரை மீளாய்வு

# சாத்தியம் இல்லை

## உதவி அரச அதிபர்கள் கருத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் நிலவும் சூழ்நிலையால் உணவு முத்திரை மீளாய்வு சாத்தியம் இல்லை

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உதவி அரச அதிபர்கள் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் உணவு முத்திரை பெறுவோர் எண்ணிக்கையை 50 சத விதமாகக் குறைக்குமாறும், அது பற்றிய முடிவு செய்ய கிராம மட்டத்தில் குழுக்கள் அமைக்குமாறும் சமூக சேவைகள் அமைச்சு யாழ் சமூக சேவைப் பகுதியைக் கோரியிருந்தது.

இது குறித்து ஆராய்வதற்காக செயலகத்தில் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உதவி அரச அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இன்றைய சூழ்நிலையில் உணவு முத்திரை மீளாய்வு செய்யமுடியாதுள்ளதாகவும், கிராம மட்டத்தில் குழுக்கள் அமைக்க கிராம சேவையாளர்களால் விடுக்கப்பட்ட அழைப்புகளை மக்கள் ஏற்று கூட்டங்களுக்கு சமுகமளிக்கவில்லை என்றும் உதவி அரச அதிபர்கள் தெரிவித்தனர். [இ-3]

## தமிழீழ ஆய்வு நிறுவனம் தேனீ வளர்ப்புத் திட்டம்

மானிப்பாய், ஏப்ரல் 18

தேனீ வளர்ப்பில் ஈடுபட விரும்புவோருக்கு தேவையான தேனீ வளர்ப்புப் பெட்டிகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் வழங்கி வருகின்றது.

தேனீப் பெட்டிகளை வாங்குபவர்களுக்கு தேனீ வளர்ப்புப் பற்றிய இலவச ஆலோசனைகளையும், நுட்ப முறைகளையும் நிறுவனம் வழங்கி வருகிறது. [இ-90]

## 2,150 ஆசிரியர்களுக்கு வவுனியாவில் பற்றாக்குறை

வவுனியா, ஏப்ரல் 18

வவுனியா மாவட்டத்திற்கு 2150 ஆசிரியர்கள் புதிதாகத் தேவைப்படுகின்றனர்.

வவுனியாப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரட்ணராஜா இதனைத் தெரிவித்தார்.

150 பாடசாலைகளையும், 1550 ஆசிரியர்களையும் கொண்டுள்ளவவுனியாமாவட்டத்தில் 33,500 மாணவர்கள் உள்ளனர்.

கடந்த கால அசம்பாவிதங்களால் 18 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

30 பாடசாலைகள் வேறு இடங்களில் இயங்குகின்றன. 400 ஆசிரியர் பாடசாலைகள் இன்றி வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர் என்றும் அவர் தெரிவித்தார். [இ-த]

## உணவு விடுதி ஊழியருக்கு மாநகரசபை பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட உணவு விடுதிகள், போசனசாலைகள் ஆகியவற்றில் கடமை ஆற்றும் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது.

சுகாதாரத்தைப் பேணல், உணவுப் பொருட்களை காட்சிக்கு வைத்தல், நோய்கள் பரவாமல் தடுக்கும் முறைகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக பல்வேறு பகுதிகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் ஊழியர் பயிற்சி முடிவடைந்த பின்னர் அதன்படி ஒழுங்காகக் கடமையாற்றினால் மட்டுமே சம்பந்தப்பட்ட கடைக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் என்று யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-3]

## சொந்த இடம் திரும்புமாறு அகதிகளுக்கு நிர்ப்பந்தம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கி உள்ள தமிழர்களை முகாம்களை விட்டு வெளியேறி சொந்த இடங்களில் குடியேறுமாறு படையினர் வற்புறுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

'இனி நிவாரணம்' தர முடியாது. முகாம்களை விட்டு வெளியேறி உங்கள் சொந்த இடங்களில் குடியேறுங்கள். வேண்டுமானால் 5 ஆயிரம் ரூபா தருகிறோம் என்று கூறி படையினர் அவர்களை மிரட்டுகின்றனராம்.

தமக்கு பாதுகாப்பு இல்லை என்றும், தமது வீடுகள் முற்றாக நாசமாக்கப்பட்டதால் வீடுகளுக்கு திரும்பமுடியாதுள்ளதாகவும் அந்த மக்கள் படையினரிடம் தெரிவித்துள்ளனர் என்று அறிய வருகிறது. [இ-3]

## குர்டிஷ் அகதிகளுக்கு பாதுகாப்பு முகாம்கள்

வாஷிங்டன், ஏப்ரல் 17

ஈராக்கின் வடக்குப் பகுதியில் குர்டிஷ் அகதிகளுக்கு பாதுகாப்புடன் கூடிய விசேஷ முகாம்களை அமைக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

அம்முகாம்களில் தங்கியுள்ள குர்டிஷ் மக்களுக்கு அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப்படைகள் ஆகாய மற்றும் தரைமார்க்கமான பாதுகாப்புக்களை வழங்கும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறினார்.

ஈராக்கின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக இந்த நடவடிக்கையைக் கருதக் கூடாது என்றும் திரு. புஷ் தெரிவித்தார்.

அகதி முகாம்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் படைகளை ஆக்கிரமிப்புப் படையினராகவும் கருதக்கூடாது. குர்டிஷ் மக்கள் அடையும் துன்பங்களைத் துடைக்கும் பணியில் தான் இப்படைகள் ஈடுபடும் என்றும் திரு. புஷ் சொன்னார். [இ-எ]

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஏப்ரல், 18

''பாலம்'' பொதுப்பணி மன்றத்தின் பணிமனை, சத்திரம் என்பன எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப் படவுள்ளன.

ஒருவர் மற்றவர்க்காகவும், எல்லோரும் எல்லோர்க்காகவும் உதவ வேண்டும் என்னும் சமுதாய உணர்வின் அடிப்படையில் இம் மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். [இ-த]

## சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 18

போஷாக்கின்மை தொடர்பான சுகாதாரக் கருத்தரங்கு 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இதில் யாழ். கோட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சமாஜத்தில் கடமையாற்றும் மாதர் முன்னணியினர் கலந்துகொள்வார்கள்.

இக்கருத்தரங்கிற்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவர் திரு. சிவமகாராசா தலைமை வகிப்பார். [இ-18]

## உ. அ. அதிபர்கள் இருவர் நியமனம்

நிர்வாக சேவை அதிகாரிகளாக சித்தி அடைந்த இருவர் உதவி அரச அதிபர்களாக மாகாண சபை உள்துறை அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை உதவி அரச அதிபராக திரு. எஸ். சீனிவாசனும், சண்டிலிப்பாய் உதவி அரச அதிபராக திரு. எஸ். கனகரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர். [ஒ-3]

# போராட்டத்துக்கு உரமூட்டியோரில் அன்னை பூபதியும் ஒருவர்

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 18

''தமிழீழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வழிவகுத்த முக்கிய கதாபாத்திரங்களில் அன்னை பூபதியும் ஒருவர். அவரின் மரணத்தை சாதாரண ஒரு பெண்ணின் மரணத்துடன் ஒப்பிடுதல் முறையல்ல. எமது இனத்தின் வரலாற்றில் அவரின் மரணம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது''

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில், மறுமலர்ச்சிக் கழகத்தினரால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி க. சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''தமிழர்களைப் பொறுத்தவரை வடக்கும் - கிழக்கும் இணைந்த அரசியற் தீர்வு தான் அவர்களின் முழுமையான உரிமையை நிர்ணயிக்க உதவும். வடக்கில் திலீபனும் தென். தமிழீழத்தில் அன்னை பூபதியும் இதனை உறுதிப் படுத்தியுள்ளனர்.

மேலும் எமது போராட்ட [illegible] இக்கட்டான கால கட்டமாகும். எனவே சகலரும் பார்வையாளராக இராது, ஏதோ ஒரு வகையில் தம் பங்களிப்பை செலுத்திட முன் வர வேண்டும்''

இப்படி அவர் கூறினார்.

மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் க. சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாணவரவைப் பிரதிநிதி மா. இளம்பிறை, கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் இ. விசாகரூபன் முதலாம் வருட மாணவர்கள் சார்பில் ஏ. வி. மரியநாயகம், இரண்டாம் வருட மாணவர்கள் சார்பில் செல்வி பவானி ஆகியோர் உரையாற்றினர். [இ-த]

## பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணம், ஏப். 18

மர்மமாக இறந்த இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

சரவணை கிழக்கைச் சேர்ந்த எஸ் தேவமலர் [19 வயது] என்னும் பெண்ணே உயிரிழந்தவர் ஆவார்.

## பாலர் பாடசாலை

சாவகச்சேரி, ஏப்ரல் 18

நுணாவில் வேதாந்த மடத்தில் திருமலை அகதிகள் குடியிருப்பில் அமைக்கப்படும் பாலர் பாடசாலை, படிப்பகம் ஆகியவை இம்மாதம் 20 ஆம் திகதி திறந்து வைக்கப்படும். [இ-31]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து பொணிப்பாஸ்

கரம்பன் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து பொணிப்பாஸ் 17-04-1991 அன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானரர்.

இவர் அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து, செபமாலை மரிஸை ஆகியோரின் அன்பு மகனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், அலிஸ்ரன் அருமைநாயகம் (முகாமையாளர், இலங்கை வங்கி - ஊர்காவற்றுறை), கிறிஸ்ரியன் விஜயநாதன் [பிரான்ஸ்], ஜோசப் ஜெகநாதன் [ஜேர்மனி], மேரி யுஸ்ரீனா பீற்றர்பிள்ளை [ஜேர்மனி], எக்ஸிவலன்ரீனா [பிரான்ஸ்], ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரி வனஜா, ராஜினி [பிரான்ஸ்], பீற்றர்பிள்ளை [ஜேர்மனி] ஆகியோரின் மாமனாரும், சுபாஷினி, நெலூஷா, டிலான் அன்றிக்கா, அண்ட்றா ஆகியோரின் அன்புப் பேரனும், இராசையா அந்தோனிப்பிள்ளை [றூபினி ரெக்ஸ்ரைல்ஸ், கொழும்பு] சூசைப்பிள்ளை பெர்னாண்டோ [மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்], இராசமணி, முத்து, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற ச. வ. முத்துத்தம்பி, அன்னம்மாவின் மருமகனும், காலஞ் சென்ற அல்பிரட் வஸ்தியாம்பிள்ளை, ஸ்ரனிஸ்லோஸ் [இளைப்பாறிய தலைமை ஆசிரியர்], அன்ரனிப்பிள்ளை [ஸ்ரேஷன் மாஸ்டர், நீர்கொழும்பு], சங்கை சகோதரி மேரி அன்ரனீற்றா [திரேசா கன்னியர் மடம், கிளிநொச்சி], பிரான்சிஸ் சேவியர் மரியதாசன் [பிரான்ஸ்], ஜோண் அமிர்தநாயகம் [லக்கி ஸ்ரோரிஸ், கிளிநொச்சி], கில்பேட் [ஒமான்] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 28, கோயில் வீதியிலுள்ள அன்னை இல்லத்திலிருந்து இன்று [18-04-1991] வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நல்லடக்க ஆராதனையின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திரு. அலிஸ்ரன் அருமைநாயகம்
இல 28, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். [4022]

## திரு. இரத்தினம் கனகசபை

வேளாதோப்பு, கல்வியங்காட்டைச் சேர்ந்த திரு. இரத்தினம் கனகசபை [Lab Assistant, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி] 17-4-1991 புதன்கிழமை இறைநிலை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம்-மனோன்மணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், திருமதி குலமணியின் அன்புக் கணவரும், கோகிலன், கிருஷ்ணிகா, தீபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி றோசம்மா [ஆசிரியை], பாக்கியம், கந்தசாமி, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. S. கணேசன், மதியாபரணம், திருமதி செங்கமலர் ஆகியோரின் மைத்துனரும், Dr. நந்தினி [அவுஸ்திரேலியா], ஸ்ரீதரன் [ஜேர்மனி], லக்ஷ்மன் [அவுஸ்திரேலியா], பகீரதன் [இந்தியா], அனுரதன் [இந்தியா], மதிவதனி, மதிவதனன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18-4-91 பிற்பகல் 4.00 மணிக்கு வேளாதோப்பு இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ. பாஸ்கரன்
வேளாதோப்பு,
கல்வியங்காடு. [16460]

## திருமதி சின்னையா சுந்தரம்

வர்த்தலைவிளான் தெங்கிராவனைச் சேர்ந்த திருமதி சின்னையா சுந்தரம் அவர்கள் 17-4-1991 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முன்னாள் அதிபர் சிவலிங்கம் [தந்தை செல்வா தொடக்கப்பள்ளி], சிவபாக்கியம் [கனடா], சிவபாதலிங்கம் [Retired Male Nurs], இராசநாயகம், செல்வநாயகி, மயில்வாகனம், சிவநேசமலர், துரைசிங்கம் [West Germany] விமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரத்தினம் [கனடா], பூபதி, விசாலாட்சி [Nursing Officer, Tellippalai - Manipay], நாகம்மா, சிவப்பிரகாசம் [Retired Hospital Staff], கமலாதேவி, நவரத்தினம், உமாதேவி, கருணாமூர்த்தி [ES, CEB] ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-4-91 வியாழன் மாலை 3.00 மணியளவில் சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குளாய் பொலிஸ் உத்தியோகத்தர் கந்தசாமி அவர்களின் இல்லத்தில் நடைபெற உள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்டிலிப்பாய் வடக்கு [16308] சிவபாதலிங்கம்

## சிறிமாவுக்கு வயது 75

கொழும்பு, ஏப் 18

எதிர்கட்சித் தலைவியும் சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று தனது 75ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

## தேவிலால் போட்டியிடார்?

புதுடில்லி, ஏப். 18

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று இந்திய துணைப்பிரதமர் தேவிலால் அறிவித்திருக்கிறார்.

''எனக்கு 77 வயதாகிறது இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் என்னால் தீவிர அரசியலில் ஈடுபட முடியும்'' —என்று திரு தேவிலால் தெரிவித்துள்ளார். [ஓ-எ]

## சமாஜ்வாதி ஜனதா கட்சி உதயம்

சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள் [எஸ்] கட்சியும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான ஜனதாக் கட்சியும் நேற்று இணைந்து புதிய கட்சி ஒன்றை அமைத்துள்ளன.

புதிய கட்சியின் பெயர் சமாஜ்வாதி ஜனதாக் கட்சி என்பதாகும். தேர்தல் சின்னமாக ''சக்கரம் - ஏர்', அமையும் என்று அறிவிக்சப் பட்டுள்ளது. [ஓ-எ]

## இன்று

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

அன்னை பூபதியின் நினைவு தினக் கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். [இ-த]

✶

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

மறைவேதியர் திரு: முத்தையாவின் வைரவிழா இன்று 18 ஆம் திகதி யாழ். மரியன்னை பேராலய முன்றலில் நடைபெறும். நிகழ்ச்சிக்கு யாழ் ஆயர் தலைமை வகிப்பார். [இ-த]

## வீடு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படவேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி காலக்கெடு விதித்திருந்தது.

இந்தக்காலக்கெடு நாளையுடன் முடிவடைகிறது.

கடந்த ஜூன்மாதம் முதல் இந்தத் திட்டத்தின் மூலம் கடன் வழங்கப்படும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்சமயம் திட்டத்தைச் செயற்படுத்து வதற்கான காலக்கெடு முடிவடைவதால் இனிமேல் இத்திட்டத்தின் மூலம் கடன் வழங்கும் சாத்தியம் இல்லாமல் போகலாம் என்று அச்சம் தெரிவிக்கப் படுகிறது. [உ-3]

## ஒன்றரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேலைகள் தடைப்பட்டன.

இழுவைப் படகுக்கு பொருள்களை இறக்கிய கையோடு கப்பலும் திரும்பி விட்டது.

கரையில் இருந்து சுமார் ஒருமைல் தூரத்தில் இந்த இழுவைப் படகு [பாஜ்] நங்கூரமிட்டு இருந்தது இராணுவ முகாமுக்குச் சமீபமான பகுதி இது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் பலமுறை முயற்சி செய்தும், தற்போதுதான் பொருள்களை இறக்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இந்த வேலைகளைக் கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் [illegible] ள்ளனர். [உ-3]

## கலைஞர் துறைமுகநகரில்

சென்னை, ஏப் 18

முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி சென்னை-துறைமுகநகர் சட்டசபைத் தொகுதியில் இருந்து மீண்டும் போட்டியிடுகிறார்.

தி. மு. காவின் முதலாவது வேட்பாளர் பட்டியலை அவர் நேற்று சென்னையில் வெளியிட்டார்.

24 லோகசபைத் தொகுதிகளிலும் 138 சட்டசபைத் தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் முதலாவது பட்டியவில் இடம் பெற்றுள்ளது.

தி. மு. க. சார்பில் அதன் முக்கிய தலைவர்கள் சிலர் போட்டியிடும் சட்டசபைத் தொகுதிகள் வருமாறு:-

★ சேப்பாக்கம்:- பேராசிரியர் க. அன்பழகன்.

★ திருவல்லிக்கேணி:- நாஞ்சில் மனோகரன்.

★ மைலாப்பூர்:- கவிஞர் நிர்மலா சுரேஷ்.

★ மதுரை மத்தி:- முன்னாள் சபாநாயகர் தமிழ்க்குடிமகன்.

★ கடலாடி — காளிமுத்து

★ ஆயிரம்விளக்கு — மு.க ஸ்டாலின். [உ-எ]

## கேரதீவில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இலக்காகி யாரும் காயமடைந்தார்களா என்பது குறித்தும்—

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்தும் இச் செய்தி எழுதப் படும் வரை தகவல்கள் கிடைக்கவில்லை.

பின்னர் இதே ஹெலிக்கொப்டர் சாவகச்சேரியை அண்டிய பகுதிகளிலும் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.



## சுதேசியன் பத்திரிகை வெளியீட்டு விழா

காலம்:- 18-4-91 காலை 8.30 மணி.

இடம்:- யாழ்/பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை அரங்கு கைதடி.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்:
[தனிப்பட்ட அழைப்பு இல்லை]

த. பெ. இல. 02,
கண்டி றோட்,
கைதடி.

சுதேச அபிவிருத்திச் சங்கம்
[செயலாளர்]
[16347]



# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி ஆனந்தராஜா

திருமதி மகேஸ்வரி ஆனந்தராஜா 17-4-1991 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையா ஆனந்தராஜா [Planter] வின் அன்பு மனைவியும், செல்வராணி ராஜரெட்ணம் [Care], Dr. சிறீகாந்தகுமார் [Oman], சந்திரகுமார், சூரியகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், அழகராஜா [S.M Fort], பபா, நிர்மலா, கௌரி, காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருசாந்தினி, கஜானந்தன், சர்வானந்தா, அனுஷன், வேணி, செந்தினி, சாமினி, ஆனந், கபீந்திரா, பிரிந்தா, திவ்யா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் சுண்டுக்குளியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக 18-4-91 காலை 10-00 மணியளவில் தண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
பிள்ளைகள்
61, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி. [16349]

## திருமதி மங்கையர்க்கரசி இராஜகோபால்

திருமதி மங்கையர்க்கரசி இராஜகோபால் காலமாகிவிட்டார்.

இவர் வேலணையை பிறப்பிடமாகவும், 126/6 அரசடி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு சபாபதி இராஜகோபால் அவர்களின் அன்பு மனைவியும். இராஜேஸ்வரன் [ஹப்பி ரெக்ஸ்], திருமதி விக்னேஸ்வரி சிவதாசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற கணேசலிங்கம் ஆகியோரின், அன்புத் தாயாரும் திருமதி சந்திரிக்காதேவி, இராஜேஸ்வரன், சிவதாசன் [ஜேர்மனி], திருமதி கணேசலிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் மாமியாரும் சங்கர், காயத்திரி, அன்பரசி, தர்ஷினி, ஆதவன், அஷ்வினி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-4-91 வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள்.

தகவல்:
சபாபதி இராஜகோபால்
126/6, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். [16350]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org